**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**

**S.C. No.120/2024**
**PW5**

| | | |
|---|---|---|
| Name | : | அன்பழகன் |
| Father's Name | : | முத்து |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10.07.2025.

Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேல்குண்ணுமுறிஞ்சி கிராமத்தில் வசித்து ஓட்டல் நடத்தி வருகிறேன். காயம்பட்ட பெரியசாமி, சாரங்கபாணியை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். அவரை பெரியசாமியுடன் நான் பார்த்துள்ளேன். 26.09.2023 அன்று காலை 11 மணிக்கு திருவண்ணாமலை - அவலூர் பேட்டை சந்திப்பில் நானும் , சுனில் என்பவரும் ஊருக்கு செல்ல பஸ்சுக்காக நின்று கொண்டிருந்தோம் . அப்போது மங்களம் போலிசார் என்னை வந்து விசாரித்தார்கள். அங்கிருந்த சுரேஷை போலிசார் விசாரித்தார்கள். அப்போது சுரேஷ் சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்தியை ரட்டேரி கரையில் ஒரு முட்புதரில் வைத்திருப்பதாக சொன்னார் . அதை பதிவு செய்துகொண்டு சுரேஷிடமும் என்னிடமும் கையொப்பம் பெற்றார்கள் . என்னிடம் சுனில் என்பவரும் கையொப்பம் செய்தார் . ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 3. அதன்பிறகு ரட்டேரிக்கரைக்கு சென்றோம் .

அங்குள்ள முட்புதரில் இருந்து எதிரி சுரேஷ் பட்டன் கத்தியை ஒன்றை எடுத்து கொடுத்தார். அதை போலிசார் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள் . அதில் நானும், சுனிலும் சாட்சி கையொப்பம் போட்டோம் . அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.4 .** தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவதுதான் அந்த கத்தி ( அது ஏற்கனவே சா .பொ. 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது ). எதிரியை போலிசார் அழைதது சென்றார்கள். என்னை இது சம்மந்தமாக போலிசார்விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 பெரியசாமி என் சொந்த தம்பி என்றால் சரிதான் . சுனில் என்பவர் ஆண்டாப்பட்டு கிராமத்தை சேர்ந்தவர் . அவர் என் கடையின் வாடிக்கை யாளர் . நானும் சுனிலும் 26.09.2023 அன்று திருவண்ணாமலை- அவலூர் பேட்டை பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்தோம் . போலிசார் அங்கு நடந்த சம்பவத்தை பற்றி விசாரித்தார்கள். அப்போது பெரியசாமியும் உடன் இருந்தாரா என்றால் இல்லை. நான் நீதிமன்றத்தில் சொன்னவாறுதான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் . என்னை போலிஸ் விசாரித்தபோது பட்டன் கத்திதான் என்று சொன்னேன் . கத்திகளில் பல வகை உண்டு என்றால் சரிதான் . தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்பட்டது மடக்கக்கூடிய கத்தி என்றால் சரிதான் . நான் எந்த கட்சியிலும்இல்லை. என் தம்பி பா .ம. க கட்சியில் உள்ளார். எதிரி சுரேஷிம் அந்த கட்சியில் தான் உள்ளார். சுரேஷ் (எ) காங்கேயன் போலிசாரிடம் என்ன சொன்னார் என்று எனக்கு தெரியாது . நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது . போலிசார் கேட்டுக்கொண்டதால் கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல . போலிசார் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் , அதன் அடிப்படையில் எந்த வழக்கு சொத்தும் கைப்பற்றபடவில்லை என்றும் பெரியசாமி என் உறவினர்என்பதால் நான் அவருக்காக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல . என்னை ஆண் போலிசார் விசாரித்தார்கள்.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B. C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.